**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் - 2000-2001ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டம் - மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ரூ.6.60 இலட்சம் செலவில் குடிநீர் வசதி செய்து கொடுத்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை**

அரசாணை (நிலை) எண். 45 நாள் :25.5.2000

படிக்கப்பட்டது :

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், கடிதம் எண். பி2 /305/2000 நாள் 17.4.2000

ஆணை:

மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு 2000-2001ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.6.60 இலட்சம் செலவில் குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்கான செயற்குறிப்பினை மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2.இயக்குநரின் செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டு மதுரை திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் அமைந்துள்ள 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.66,000/- செலவில் மொத்தம் 10 பள்ளிகளுக்கும் ரூ.6.60 இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மதிப்பில் ஆழ்துளைக்கிணறு, தரைமட்டத்தில் அமையப்பெற்ற நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் மின்பம்பு வசதியுடன் கூடிய குடிநீர்வசதி செய்து கொடுக்க அரசு உத்தரவிடுகிறது. குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டிய 10 பள்ளிகளின் விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

3. மேலே பத்தி 2ல் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினத்தை“4225 - ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு - 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 277 கல்வி ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் - மிமி மாநிலத் திட்டம் யிஹி கட்டிடங்கள் - 16 பெரும்பணிகள் (த.தொ.கு எண். 4225 03 277 யிஹி 1601)

4. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்28293/சந/2000 நாள்28.4.2000 இன்படி இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந.முருகன்,
அரசு செயலாளர்

பெறுநர்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை 600 005.
மாவட்ட ஆட்சியர், மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள்.
தனித்துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) மதுரை.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
மாநிலக் கணக்காயர், சென்னை-18
மாநிலக் கணக்காயர், சென்னை-35
மாநிலக் கணக்காயர், சென்னை-6
(பெயருடன் கூடிய உறையில்)
மாவட்டக் கருவூல அதிகாரி, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள்.
நகல்: பிற்பட்டோர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**இணைப்பு**

2000-2001 பகுதி-2 திட்டத்தின் கீழ் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டிய பள்ளிகளின் விவரம்:-

| வ.எண் | பள்ளியின் பெயர் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளி, மெய்யணம்பட்டி | மதுரை |
| 2 | அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளி, பி.கண்ணியம்பட்டி | மதுரை |
| 3 | அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளி, ஜல்லிபட்டி | தேனி |
| 4 | அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளி, உ.அம்மாபட்டி | தேனி |
| 5 | அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளி,அப்பிபட்டி | தேனி |
| 6 | அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளி,முத்தணம்பட்டி | தேனி |
| 7 | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, டி.காமாக்காபட்டி | தேனி |
| 8 | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, கருத்தாண்டிபட்டி | திண்டுக்கல் |
| 9 | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, எஸ். கோடாங்கிபட்டி | திண்டுக்கல் |
| 10 | அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளி,முசுவனூத்து | திண்டுக்கல் |

/உண்மை நகல்/